# COVID-19 தடுப்பூசிகளைப் பற்றி மூத்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியன

## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

இந்தத் தடுப்பூசி COVID-19 இனால் நோய் ஏற்படாமல் உங்களைப் பாதுகாக்கும். சிலர் COVID-19 இனால் மருத்துவமனைப் பராமரிப்பு தேவைப்படும் அளவுக்கு, மிகக் கடுமையாக இந்நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகலாம்.

## தடுப்பூசிகள் எவ்வாறு செயற்படுகின்றன?

இந்தத் தடுப்பூசி நோயெதிர்ப்பிகளை உருவாக்கும்படி நம் உடலுக்குச் சொல்கின்றது. COVID-19க்கு நாம் முகம் கொடுக்க நேர்ந்தால் இந்த நோயெதிர்ப்பிகள் நோய் ஏற்படாமல் நம்மைப் பாதுகாக்கும். தடுப்பூசியில் வைரஸ் இல்லை, எனவே தடுப்பூசி பெறுவதன் மூலம் உங்களுக்கு COVID-19 வராது.

## மூத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய COVID-19 தடுப்பூசிகள் எவை?

மூத்தவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் பல தற்போது உள்ளன. COVID-19 இனால் மிகக் கடுமையாக நோய் ஏற்படாமல். இத்தடுப்பூசிகள் உங்களைப் பாதுகாக்கும். தடுப்பூசிகளைப் பற்றிய மேலதிக தகவல்கள் பின்வரும் நகர இணையத்தளத்தில் கிடைக்கின்றன: https://www.toronto.ca/home/covid-19/covid-19-protect- yourself-others/covid-19-vaccines/.

## எனக்குத் தடுப்பூசி போடப்பட்டால் எவ்வளவு காலத்துக்குப் பாதுகாக்கப்படுவேன்?

இந்தத் தடுப்பூசி COVID-19 இலிருந்து, உங்களை எவ்வளவு காலத்துக்குப் பாதுகாக்கும் என்பது இந்த நேரத்தில் எங்களுக்குத் தெரியாது. தடுப்பூசிக்குப் பின்னர் பாதுகாப்புக் குறைந்துவிட்டால், வீரியமூட்டும் (booster) டோஸ் ஒன்று வழங்கப்படலாம்.

## எனக்கு நீடித்திருக்கும் உடல்நலப் பிரச்சினைகள் உள்ளன; நான் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?

அனைத்து COVID-19 தடுப்பூசிகளும் மூத்தவர்களுக்கும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதயம் மற்றும் சுவாச நோய் போன்ற நீண்டகால உடல்நலப் பிரச்சினைககளைக் கொண்டவர்களுக்கும் பாதுகாப்பானவையாகும். நோய் அல்லது மருந்துகள் காரணமாகப் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி உள்ளவர்கள் முதலில் தங்கள் உடல்நலப் பராமரிப்பாளரிடம் அது பற்றிப் பேச வேண்டும்.

## எனக்கு ஒவ்வாமை உள்ளது, நான் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?

மூத்தவர்களுக்கு வழங்கப்படும் mRNA தடுப்பூசிகளில் நுண்ணுயிர் கொல்லிகள், லேடெக்ஸ், முட்டை, விலங்குப் பதார்த்தங்கள் அல்லது குருதிப் பதார்த்தங்கள் என எதுவும் இல்லை. எந்தவொரு தடுப்பூசி மூலப்பொருளுக்கும் கடுமையான ஒவ்வாமை உள்ளவர்கள், முதலில் அவர்களின் உடல்நலப் பராமரிப்பாளரிடம் அது பற்றிப் பேச வேண்டும். எந்தவொரு எதிர்விளைவுகளையும் கவனிப்பதற்காகத் தடுப்பூசி பெற்ற பின்னர் 15 நிமிடங்களுக்கு நீங்கள் அவதானிக்கப்படுவீர்கள். ஒவ்வொரு தடுப்பூசியிலும் உள்ள பொருட்களின் விரிவான பட்டியல் பின்வரும் நகர இணையத்தளத்தில் கிடைக்கின்றது: https://www.toronto.ca/home/covid-19/covid-19-protect-yourself-others/covid-19-vaccines/covid-19-about-the-vaccines/

## எனக்கு COVID-19 தொற்று ஏற்கனவே ஏற்பட்டிருந்தாலும் கூட, நான் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டுமா?

ஆம். COVID-19 ஏற்பட்டதனால் உண்டான இயற்கையான நோயெதிர்ப்பு சக்தி நீண்ட காலத்துக்கு நீடிக்காது. COVID-19 இனால் நீங்கள் மீண்டும் நோய்க்குள்ளாகலாம். COVID-19 அறிகுறிகள் உள்ள எவரும் தடுப்பூசி பெறுவதற்கு முன்பு, சுய-தனிமைப்படுத்தலில் இல்லாது அவர்கள் நன்றாக இருப்பதாக உணரும் வரைக்கும் காத்திருக்க வேண்டும்.

## தடுப்பூசி எனக்கு நோய் உண்டாக்குமா?

தடுப்பூசியில் வைரஸ் இல்லை, எனவே தடுப்பூசி பெறுவதன் மூலம் உங்களுக்கு COVID-19 வராது. இந்தத் தடுப்பூசியும் ஏனைய தடுப்பூசிகளைப் போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் (உதாரணமாக. காய்ச்சல் ஊசி). எதிர்வினைகள் பொதுவாக சில நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும். பின்வருவனவற்றை அவதானிக்கலாம்:

- ஊசி போடப்பட்ட இடத்தில் சிவத்தல், வலி அல்லது வீக்கம்
- தலைவலி, சோர்வாக உணர்தல், தசை வலி, மூட்டு வலி
- காய்ச்சல், குளிருணர்ச்சி, குமட்டல், வாந்தி
- அக்குளின் கீழ் வலி அல்லது வீக்கம் அல்லது நிணநீர் முனைகளில் வீக்கம் (பொதுவாகக் குறைவு)

இரண்டாவது டோஸுக்குப் பின்னராகப் பக்க விளைவுகள் அதிகம் காணப்படுகின்றன. எதிர்வினைகள் சில நாட்களுக்கு மேலாக நீடித்து கொண்டிருந்தால், உங்கள் உடல்நலப் பராமரிப்பாளரிடம் அது குறித்துப் பேச வேண்டும்.

## தடுப்பூசி போடப்பட்ட பின்னர் நான் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிச் செல்ல முடியுமா?

உங்கள் உடல் COVID-19 க்கு எதிராக நல்ல நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கு தடுப்பூசி போட்டதிலிருந்து இரண்டு வாரங்கள் வரை ஆகலாம். சமூக நோயெதிர்ப்பு சக்தியைப் பெற்றுக்கொள்ளப் பெரும்பாலான மக்கள் தடுப்பூசி போடும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும். எனவே, முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியைப் பேணல், மற்றும் நோயுற்றிருக்கும்போது வீட்டிலேயே இருத்தல் போன்ற பொது சுகாதார நடவடிக்கைகளைப் பெரும்பாலான மக்கள் தடுப்பூசி போடும் வரை நீங்கள் தொடர வேண்டும்.

## தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு நான் எங்கே போக வேண்டும்?

முடிந்தவரை ஊசிகள் கிடைக்கும் போதெல்லாம் குடியிருப்பாளர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்காக, ரொறன்ரோ பொது சுகாதாரம், ஒன்ராறியோ சுகாதாரக் குழுக்கள், மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் முதன்மைப் பராமரிப்பு வழங்குநர்கள் உள்ளிட்ட ரொறன்ரோவின் சுகாதாரத் துறையானது, ஒன்றிணைந்து விரைவாகப் பணியாற்றி வருகின்றது. நகரத்தால்-இயக்கப்படும் நோய்த்தடுப்பு சிகிச்சையகங்கள் யாவும் ரொறன்ரோவுக்கான நோய்த்தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே - அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் தடுப்பூசி போடுவதற்கு இன்னும் பல வாய்ப்புகள் இருக்கும். ரொறன்ரோவில் தடுப்பூசி போடும்-முறை குறித்த புதிய தகவல்கள் பின்வரும் நகர இணையத்தளத்தில் வெளியிடப்படும்: https://www.toronto.ca/home/covid-19/covid- 19-protect-yourself-others/covid-19-vaccines/

## ஏதாவது கேள்விகள் உள்ளதா?

உங்கள் உடல்நலப் பராமரிப்பாளருடன் பேசவும் அல்லது மேலதிகத் தகவல்களுக்கு. toronto.ca/COVID19 ஐப் பார்வையிடவும்.